## ஊடக வெளியீடு

## 2016 செப்டெம்பர் 02

# மத்திய வைப்புத்திட்ட முறைமை (CDS) இலங்கையின் மூலதனச் சந்தையில் 25 வருட பூர்த்தியை கொண்டாடுகின்றது

**கொழும்பு:**

கொழும்பு பங்குப்பரிவர்த்தனையின் முழு உரித்தான வரையறுக்கப்பட்ட மத்திய வைப்புத்திட்ட முறைமைகள் தனியார் கம்பனி இலங்கையின் மூலதனச்சந்தையில் 25 வருட பூர்த்தியை இன்று கொண்டாடுகின்றது. மத்திய வைப்புத்திட்ட முறைமையானது இலங்கையின் பங்குச்சந்தை தீர்த்து வைத்தல் மற்றும் தீர்ப்பணவு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக கொழும்பு பங்குப்பரிவர்த்தனையினால் 1991 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது.

இந்த மைல்கல்லானது ஓர் விசேட சந்தை ஆரம்ப நிகழ்வில், ஆசிய-பசுபிக் மத்திய பிணைகள் வைப்பக குழுவின் தலைவர் திரு. முஹம்மட் ஹனிப் ஜெக்வுரா, இலங்கை பிணைகள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தலைவர் திரு. திலக் கருணாரட்ன, இலங்கை பிணைகள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் திரு. வஜிர விஜேகுனவர்தன, கொழும்பு பங்குப்பரிவர்த்தனை மற்றும் மத்திய வைப்புத்திட்ட முறைமையின் தலைவர் திரு. வஜிர குலதிலக, கொழும்பு பங்குப்பரிவர்த்தனையின் பணிப்பாளர்கள் திரு ரே அபேவர்தன, திரு. அசங்க செனவிரட்ன, திரு. அரவிந்த பெரேரா, திருமதி. ஜீவா நிரியெல்ல மற்றும் கொழும்பு பங்குப்பரிவர்த்தனையின் பிரதான நிறைவேற்று அதிகாரி திரு. ரஜீவ பண்டாரநாயக்க மற்றும் இலங்கையின் மூலதனச்சந்தையிலிருந்தான விஷேட விருந்தினர்கள் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் கொண்டாடப்பட்டது.

மத்திய வைப்புத்திட்ட முறைமையானது, உள்நாட்டு மற்றும் சர்வதேச முதலீட்டாளர்கள் சார்பாக பிணைகளின் தீர்த்துவைத்தல், மாற்றல்கள், பிணைகளின் பாதுகாப்பு ஆகிய தொழிற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. நிலையான புத்துருவாக்கம், பங்குதாரர்களை நோக்காகக் கொள்ளல் மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி ஆகியவற்றின் ஊடாக அதன் பங்குதாரர்களுக்காக பிணைகளை வைப்பிலிடுதல், கணக்குச் சேவைகள், கம்பனித்துறை நடவடிக்கைச் சேவைகள் மற்றும் தீர்ப்பணவு மற்றும் தீர்த்துவைத்தல் சேவைகள் ஆகியவற்றை தற்போது மத்திய வைப்புத்திட்ட முறைமை கையாளுகின்றது.

இலங்கை பிணைகள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் திரு. வஜிர விஜேகுனவர்தன இந்த நிகழ்வில் உரையாற்றுகையில், "இடர்நேர்கையினை குறைத்தல், கிரயத்தினை வரையறுத்தல், முதலீட்டாளர்களின் சொத்துக்களை பாதுகாத்தல் மற்றும் பெறுமதிசேர் சேவைகளை பங்குதாரர்களுக்கு வழங்குதல் ஆகியவற்றினூடாக மூலதனச்சந்தையின் கிரமமான தொழிற்பாட்டு வகிபாகத்தினை மத்திய வைப்புத்திட்ட முறைமை கொண்டுள்ளது. குறிப்பாக ஒரு வைப்பகத்தோடு பாரம்பரிய அடிப்படையில் இணைந்திருக்காத வியாபாரததிற்கு பின்னரான தீர்த்துவைத்தல் செயற்பாட்டினை மத்திய வைப்புத்திட்ட முறைமை மேற்கொண்டு வருகின்றது" எனக் குறிப்பிட்டார்.

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை மற்றும் மத்திய வைப்புத்திட்ட முறைமையின் தலைவர் திரு. வஜிர குலதிலக இந்த மைல்கல் தொடர்பாக குறிப்பிடுகையில் "இன்று 25 வருட பூர்த்தியை

கொண்டாடுவதையிட்டு நாம் பெருமையடைகின்றோம். மத்திய வைப்புத்திட்ட முறைமையானது USAID இனால் ஒரு திட்டத்தினூடாக ஆசிய பிராந்தியதிதல் மூலதனச்சந்தையின் தனித்தன்மையான ஒரு நிறுவனமாக ஸ்தாபிக்கப்பட்டது. இது நிலையான வளர்ச்சியினை கொண்டிருந்ததோடு இலங்கையின் மூலதனச்சந்தையின் மேம்பாட்டினை நோக்காகக் கொண்டு சிறந்த முறையில் தொழிற்பட்டு வந்தோம் என நான் நம்புகின்றேன்" எனக் குறிப்பிட்டார்.

ஆசிய-பசுபிக் மத்திய பிணைகள் வைப்பக குழுவின் தலைவர் மற்றும் பாக்கிஸ்தான் மத்திய வைப்பக கம்பனியின் பிரதான நிறைவேற்று அதிகாரி திரு. முஹம்மட் ஹனிப் ஜெக்வுரா, மத்திய வைப்புத்திட்டத்தினை வாழ்த்தியதோடு "மத்திய வைப்புத்திட்டமானது கடந்த 25 வருட காலமாக முன்மாதிரியான நிறுவனமாக இருந்து வந்துள்ளமையை நிரூபித்துள்ளது, சந்தைக்கான தொழில்நுட்ப ரீதியான பணிச்சட்டத்தினை பராமரித்தமை மட்டுமல்லாது இலங்கையிலும் ஆசிய வலயத்திலும் பொறுப்புடைமை மற்றும் செம்மை ஆகியவற்றை பாதுகாத்து வந்த ஒரு குறிப்பிடத்தகு நிறுவனமாக விளங்குகின்றது" எனக்குறிப்பிட்டார்.




**கொழும்பு பங்குப்பரிவர்த்தனை பற்றி**

இலங்கையிலுள்ள ஒரேயொரு பங்குச் சந்தையை கொழும்பு பங்குப்பரிவர்த்தனை இயக்குவதுடன் கம்பனிகளும் முதலீட்டாளர்களும் ஒன்றிணையக்கூடிய ஓர் வெளிப்படையான மற்றும் முறைமைப்படுத்தப்பட்ட சூழலை வழங்குவதற்கும் பொறுப்பாயுள்ளது. கொழும்பு பங்குப் பரிவர்த்தனையானது இலங்கையின் சட்டங்களுக்கமைய ஸ்தாபிக்கப்பட்ட உத்தரவாதத்தினால் பொறுப்பு வரையறுக்கப்பட்ட ஓர் கம்பனியாகும். இந்நிறுவனம் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் உரிமமளிக்கப்பட்டுள்ளதுடன் இது 15 அங்கத்தவர்களையும் 20 வியாபார அங்கத்தகவர்களையும் உள்ளடக்கிய ஓர் பரஸ்பரமுள்ள பரிமாற்றகமாகும். அனைத்து அங்கத்தவர்கள் மற்றும் வியாபார அங்கத்தவர்கள் பங்குத்தரகர்களாகச் செயற்படுவதற்கு இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் உரிமமளிக்கப்பட்டுள்ளார்கள். மேலதிகத் தகவல்களுக்கு www.cse.lk பை பார்க்கவும்.

மேலதிகத் தகவல்களுக்கு:

நிரோஷன் விஜேசுந்தர
தலைவர்
சந்தை அபிவிருத்திப் பிரிவு

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை
தளம் 04, மேற்கு கோபுரம்
உலக வர்த்தக மையம்
எச்லன் சதுக்கம்
கொழும்பு 01
இலங்கை.

தொலைபேசி : + 94 11 2356510

கையடக்கத் தொலைபேசி : + 94 777 819999

தொலைநகல் : + 94 11 2445279